### வண்ணாரப்பேட்டை – விம்கோ நகர் மெட்ரோ பாதையில்

# விரைவு ரயில் இயக்கி அதிகாரிகள் சோதனை

சென்னை, பிப். 8–

வண்ணாரப்பேட்டை – திருவொற்றியூர் விம்கோநகர் இடையே, புதிய மெட்ரோ ரயில் பாதையில் நேற்று, விரைவு ரயில் இயக்கி சோதனை நடத்தப்பட்டது.

சென்னை மெட்ரோ முதல் திட்ட, நீட்டிப்பு திட்டத்தில், வண்ணாரப்பேட்டை – திருவொற்றியூர் விம்கோ நகர் இடையே, 9.1 கி.மீ., மெட்ரோ ரயில் பாதை அமைக்கப்பட்டுள்ளது.

## பாதுகாப்பு

இப்பாதையில், 5ம் தேதி முதல், நேற்று வரை, ரயில்வே பாதுகாப்பு கமிஷனர் சோதனை நடத்தினார்.

ரயில் பாதை, சிக்னல், நிலைய கட்டுமானங்கள், நடைமேடைகள், இயக்க கருவிகள், மின் தொடர்பு சாதனங்கள், சுரங்க நிலையங்களில் காற்றோட்ட வசதி, மின் ஏணிகள் செயல்பாடு, தானியியங்கிடிக்கெட்இயந்திரங்களின் செயல்பாடு, ரயில் நிலைய பாதுகாப்பு வசதிகள் குறித்து சோதனை நடத்தப்பட்டது.

## ஏற்பாடு

சோதனை முடிவுகள் திருப்தியாக இருந்ததால், ரயில்வே பாதுகாப்பு கமிஷனர் அபய்குமார் ராய் மற்றும், துணை கமிஷனர்கள், மூன்று பேர் அடங்கிய குழுவினர் அடுத்த கட்ட ஆய்வு நடத்தினர்.

வண்ணாரப்பேட்டையில் இருந்து; திருவொற்றியூர் விம்கோ நகர் இடையே, நேற்று மாலை, 3:15 மணியில் இருந்து,



வண்ணாரப்பேட்டை – திருவொற்றியூர் விம்கோநகர் இடையே, நேற்று, ரயில்வே பாதுகாப்பு கமிஷனர் விரைவு ரயில் இயக்கி சோதனை நடத்தினார்.

நான்குபெட்டிகள்இணைக்கப்பட்ட மெட்ரோ ரயில், 80 கி.மீ, வேகத்தில் இயக்கி, சோதனை நடத்தப்பட்டது.

சோதனையின்போது, சென்னை மெட்ரோ ரயில் நிர்வாக இயக்குனர் பிரதீப் யாதவ், இயக்குனர்கள் ராஜீவ்நாராயண் திவேதி, ராஜேஷ்சதுர்வேதி மற்றும் அதிகாரிகள் உடனிருந்தனர்.

## உரிய அனுமதி

அனைத்து சோதனைகளும் நிறைவடைந்த பின், இந்த மார்க்கத்தில், பயணியர் போக்குவரத்தை துவங்க உரிய அனுமதி வழங்கப்படும் என, அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

வரும், 14ம் தேதி சென்னை வரும் பிரதமர் மோடி, இந்த ரயில் போக்குவரத்தை துவங்கி வைப்பதற்காக ஏற்பாடுகள் நடந்து வருகின்றன.